# கிருஷ்ணகிரி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2020-21-ம் நிதியாண்டிற்கான வருடாந்திர திட்ட அறிக்கை

## (DMFT-Annual Plan)

அரசாணை (எம்.எஸ்) எண்.58 தொழில் (எம்.எம்.டி.1) துறை நாள்: 19.05.2017, அரசாணை (எம்.எஸ்) எண்:90 தொழில் (எம்.எம்.டி.1) துறை நாள்:27.07.2017, மற்றும் அரசாணை (எம்.எஸ்) எண்.81 தொழில் (எம்.எம்.டி.1) துறை நாள்:14.08.2018-ன்படி தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன்படி கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண் ந.க.414/கனிமம்/2017, நாள்:14.09.2017-ன்படி கிருஷ்ணகிரி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை உருவாக்கப்பட்டு, ஆவண எண்.22/2017/BK4, நாள்:26.9.2017-ன்படி கிருஷ்ணகிரி இணை சார் பதிவாளர்-II அலுவலகத்தில் அறக்கட்டளைப் பத்திரமானது பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக பாரத ஸ்டேட் வங்கிக் கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண்.37243080996) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது.

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன்படி குவாரிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் அப்பகுதி சுற்றியிலும் வசிக்கும் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுற்றுச்சூழல், சுகாதர வசதிகள், கல்வி வளர்ச்சித் திட்டப் பணிகள், மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான நல்வாழ்வு திட்டம் மற்றும் இதர பணிகள் ஏற்படுத்தி தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2 பெருங்கனிம சுரங்கக் குத்தகை உரிமங்களும் 337 சிறு கனிம குவாரி குத்தகை உரிமங்களும் உள்ளன. சிறுகனிம குத்தகையில் 216 கிரானைட் குவாரிகளும் மற்றும் 121 சாதாரண கல் குவாரிகளும் உள்ளன. நடப்பிலுள்ள பெரு/சிறு கனிம உரிமங்கள் வழங்கப்பட்டதில் உரிமக் கட்டணத்தில் 30% தொகையாகவும், 12.1.2015-க்கு பின்னர் வழங்கப்பட்ட இனங்களில் உரிமக் கட்டணத்தில் 10% கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுரங்கப் பணிகளால் நேரடியாக 127 கிராமங்களும், மறைமுகமாக 211 கிராமங்களும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன. கிருஷ்ணகிரி மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியாக 31.03.2020-வரை ரூ.4,81,54,932/- (ரூபாய் நான்கு கோடியே எண்பத்து ஒரு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தி இரண்டு மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் 2017-18ம் நிதி ஆண்டில் கிருஷ்ணகிரி மாவட்ட கனிம அறக்கட்டளை திட்டங்களுக்கு மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண்:414/2017/கனிமம் நாள்:12.07.2018-ன்படி ரூ.64.60 இலட்சமும், 2018-19ஆம் நிதியாண்டில் அரசாணை எண்:37 தொழில் (MMD.1) துறை நாள்25.02.2019ன்படி ரூ.1012.65 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் கிருஷ்ணகிரி மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியிலிருந்து கோவிட் -19 நோய் தொற்று தடுப்பு / சிகிச்சை நடவடிக்கைக்காக கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண்:299/2020/கனிமம் நாள்:09.04.2020-ன்படி ரூ.166.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 2020-21ம் ஆண்டில் மாவட்ட கனிம அறக்கட்டகை நிதியின் கீழ் பின்வரும் திட்டங்கள் பெறப்பட்டுள்ளது.

திட்டங்களின் விவரம்

| வ. எண் | திட்டப்பணிக்கு பரிந்துரைக்கப்பட்ட அலுவலர்கள் விவரம் | பணிகள் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | Joint Director (Health), Krishangiri | Strengthen secondary care Hospitals with Equipments for the Benefits of Patients and Public | 152.70 |
| 2 | Joint Director (Health), Krishangiri | Upgrading of GHQH, Krishnagiri with new post mortem Building construction for the Benefits of Public | 70.29 |
| 3 | Joint Director / Project Director, DRDA,Krishnagiri. | Construction of Kitchen shed for Govt.mentally retarded persons Home at samathuvapuram | 4.500 |
| 4 | Joint Director / Project Director, DRDA,Krishnagiri. | Providning new borewell, motor with pipeline & sump Govt.mentally retarded persons Home at samathuvapuram | 6.500 |
| 5 | Joint Director / Project Director, DRDA,Krishnagiri. | Construction of Toilet building for Govt.mentally retarded persons Home at samathuvapuram | 11.800 |
| 6 | Joint Director / Project Director, DRDA,Krishnagiri. | Construction of compound wall for Govt.mentally retarded persons Home at samathuvapuram | 17.00 |
| 7 | Joint Director / Project Director, DRDA,Krishnagiri. | Strengthening of the BT road from Gummanoor - Jinjupalli road to NH road km 1/0-1/650 H/o.Jinjupalli. | 24.32 |

| | | | |
|---|---|---|---|
| 8 | Joint Director / Project Director, DRDA,Krishnagiri. | Strengthening of the BT road from Gummanoor - Jinjupalli road to NH road km 1/0-1/650 H/o.Jinjupalli (R413) | 37.39 |
| 9 | Joint Director / Project Director, DRDA,Krishnagiri. | Providing BT road on KRP Dam LMC Jeep track in Gudur village of Chowtahalli panchayat in Krishnagiri Tk & Dt. | 25.00 |
| 10 | Joint Director / Project Director, DRDA,Krishnagiri. | Providing BT road on KRP Dam LMC Jeep track in Kariyankottai village of Chowtahalli panchayat in Krishnagiri Tk & Dt. | 25.00 |
| 11 | District Forest Officer, Hosur | Providing steel wire rope fencing with RCC structure for a vertical fence posts along the reserved forest boundary to prevent the entry of elephants to Agriculture / patta lands | 175.00 |
| | | **Total** | **549.50** |

மேலும், மேற்காணும் திட்டங்கள் நிறைவேற்றப்படுவது தொடர்பாக நிர்வாக குழு பரிந்துரையின்படி மேலாண்மைக்குழு உறுப்பினர்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் கூட்டம் நடத்தப்பட்டு கலந்தாலோசித்து வரப்பெற்றுள்ள திட்டங்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

13/14

9.8.20

9/8/2020

தலைவர் / கிருஷ்ணகிரி மாவட்ட கனிம
அறக்கட்டளை &
மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி.